தனிச்சுற்று மட்டும்

C.S.I கோயமுத்தூர் திருமண்டலம்

256, பந்தய சாலை, கோயமுத்தூர் – 18

# நற்செய்தி கதிர்

## DIOCESAN BOARD OF MISSION -DBM

திருமண்டல நற்செய்தி பணி இயக்கம்

ஜூன் மாத இதழ் 2026









நற்செய்தி பணிஇயக்கம் 256 பந்தயசாலை கோயமுத்தூர் 641 018

## பதிப்பாசிரியரிடமிருந்து........

**கிறிஸ்துவில் அன்பிற்கு உரியவர்களே நற்செய்தி கதிர் இதழ் வழியாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம்.**

நற்செய்தி பணியக்கத்தின் ஊழியங்கள், பணித்தளங்களின் தேவைகள், நற்செய்தி பணியாளர்கள் பற்றிய செய்திகளை இவ்விதழ் வழியே நாம் பகிர்ந்து கொள்ள உள்ளோம். இது நற்செய்தி பணி இயக்கத்திற்கும் இறைமக்களுக்கும் இடையே இணைப்பு பாலமாக விளங்கும். இதன் வழியே இன்னமும் அறியப்படாத மக்கள் தேவையுள்ளோர் ஆகியோருக்கு ஆண்டவரின் அன்பை நாம் வெளிப்படுத்துகிற ஊழியத்தை அறிந்து கொள்ள இருக்கிறோம். இவ்விதழ் வழியாக கோவை திருமண்டலத்தின் திருச்சபைகள், கல்வி நிறுவனங்கள், ஆதரவு இல்லங்கள், திருச்சபை இறைமக்கள் அனைவருக்கும் திருமண்டல நற்செய்தி பணியின் ஊழியங்களை கொண்டு வந்து சேர்க்க முற்படுகிறோம்.

நம் DBM மிஷனரி ஊழியத்தில் தமிழ், இருளா, படுகா, தோடா, ஹிந்தி, மலையாளம் என ஆறு மொழி பேசும் மக்களிடத்தில் மிஷனரி ஊழியத்தை நாம் நிறைவேற்றி வருகிறோம். காடுகள், மலைகள், சமவெளிப் பகுதிகள், கிராமங்கள், நாட்டுப்புறப் பகுதிகள் என எல்லா இடங்களிலும் இந்த நற்செய்தியைக் கொண்டுபோக வேண்டிய பணியை பொறுப்புடனும் அர்ப்பணிப்புடனும் நற்செய்தி பணியாளர்களாகிய நம்முடைய மிஷனரிகள் செய்து வருகிறார்கள்.

2026 ஜூன் 1 முதல் **கோயமுத்துர் முன்னேற்ற பணியாளராக திரு.டேனியேல் யுவராஜ் (94883 31882)**அவர்களும் **நீலகிரி முன்னேற்ற பணியாளராக திரு. வினோத் டேனியல் (63845 67878)** ஆகியோர் நியமிக்க பட்டுள்ளன, இதுவரை கோவை முன்னேற்ற பணியாளராக உதவி செய்த திரு, கோபிநாத் அவர்களுக்கு நன்றி தெரிவித்து கொள்கியோம்.

ஒரு மாத நற்செய்தி கதிர் இதழை வெளியிடுவதற்கான செலவு ரூ.10,000 ஆகும்.இந்த அரிய நற்செய்தி ஊழியத்தை முன்னெடுக்க தங்களின் மனமார்ந்த காணிக்கையையும் ஆதரவையும் அன்புடன் வேண்டுகிறோம். தங்களுடைய தனிநபர், அல்லது குடும்பபுகைப்படம் மற்றும் நிறுவனங்களின் பெயர்களை வெளியிட்டு வாழ்த்து செய்தியை பகிர்ந்து கொள்வோம். – நிர்வாகம்



**இதழ் தொடர்பு**

அருள்திரு. Rt. Rev. S.பிரின்ஸ் கால்வின்
தலைவர் – பேராயர்

அருள்திரு. ஆ.சற்குணம்
பதிப்பாசிரியர் – நற்செய்தி கதிர்
கூட்டுனர் DBM 94861 97877

அருள்திரு. I.D ஜேக்கப் ரவிக்குமார்
இயக்குனர் – DBM 94431 01467

நற்செய்தி பணி இயக்கம்
CSI கோயமுத்தூர் திருமண்டலம்,
256, பந்தய சாலை,
கோயமுத்தூர் –18

## இதழின் உள்ளே

**பக்கம்**

| | |
|---|---|
| பதிப்பாசிரியாடமிருந்து. | 2 |
| பேராயர் உரை | 3 |
| கூட்டுநர் செய்தி | 4 |
| இயக்குநர் அறிக்கை | 5 |
| பணித்தள இறைவேண்டல் குறிப்புகள் | 6 |
| பணித்தளம் அறிவோம் | 11 |
| நற்செய்தி பணியாளர் & பணித்தளம் | 12 |

**நீ இப்படிப்பட்ட காலத்திற்கு உதவியாய் இருக்கும்படி எஸ்தர் 4;14....**



Rt. Rev.s. பிரின்ஸ் கால்வின்
பேராயர்

**அன்பிற்கினிய திருமண்டல நற்செய்தி பணி இயக்கத்தின் (DBM) தாங்குநர்களேர்களே,**

நம் ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் உங்களை அன்புடன் வாழ்த்துகிறேன். திருமண்டல நற்செய்தி பணி இயக்கத்தின் பணிகளை ஜெபத்தாலும், காணிக்கைகளாலும், ஊக்கமூட்டும் ஆதரவாலும் தாங்கி நிற்கும் உங்கள் ஒவ்வொருவருக்கும் என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். உங்கள் அர்ப்பணிப்பின் மூலம் பல இடங்களில் நற்செய்தி அறிவிக்கப்படுகிறது; பல குடும்பங்கள் நம்பிக்கையைப் பெறுகின்றன; பலர் கிறிஸ்துவின் அன்பை அனுபவிக்கின்றனர்.

"நீ இப்படிப்பட்ட காலத்திற்கு உதவியாய் இருக்கும்படி உனக்கு ராஜ மேன்மை கிடைத்திருக்கலாமே" (எஸ்தர் 4:14) என்ற இந்த வார்த்தைகளை நமது தியானத்திற்கு எஸ்தர் 4:14 ஐ எடுத்துக்கொள்கிறோம், இந்த வார்த்தைகள் மொர்தெகாய் எஸ்தரிடம் கூறிவைகளாகும். யூத மக்கள் அழிவின் விளிம்பில் இருந்தபோது, கடவுள் எஸ்தரை அரண்மனையில் வைத்திருந்தார். அவள் தன் வசதியையும் பாதுகாப்பையும் மட்டும் எண்ணி அமைதியாக இருந்திருக்கலாம். ஆனால் மொர்தெகாயின் அழைப்பை ஏற்று, கடவுளின் நோக்கத்தை உணர்ந்து செயல்பட்டபோது, ஒரு முழு இனத்தின் இரட்சிப்புக்கு கருவியாக மாறினாள்.

எஸ்தர் 4:14 வசனம் நமக்கு ஒரு முக்கியமான இறையியல் உண்மையை வெளிப்படுத்துகிறது. கடவுள் தமது மக்களை தற்செயலாக எந்த இடத்திலும் வைப்பதில்லை. ஒவ்வொருவருக்கும் ஒரு நோக்கம் உண்டு; ஒவ்வொரு காலத்திற்கும் ஒரு அழைப்பு உண்டு. **எஸ்தர் அரண்மனையில் இருந்தது ஒரு சம்பவம் அல்ல**; **அது கடவுளின் திட்டம்**. அதுபோல நாமும் இன்று வாழும் காலம், நாம் பெற்றிருக்கும் வளங்கள், திறமைகள் மற்றும் வாய்ப்புகள் அனைத்தும் கடவுளின் நோக்கத்திற்காகவேகொடுக்கப்பட்டவை.

இன்று நமது சமுதாயம் பல சவால்களை எதிர்கொள்கிறது. ஆன்மீக வெறுமை, பொருளாதாரப் போராட்டங்கள், குடும்ப நெருக்கடிகள், இளைஞர்களின் எதிர்காலக் கவலைகள் போன்ற பல பிரச்சினைகள் மக்களை பாதிக்கின்றன. அதே நேரத்தில், கிறிஸ்துவின் அன்பையும் இரட்சிப்பின் நற்செய்தியையும் இன்னும் அறியாத ஏராளமான மக்கள் நம்மைச் சுற்றி வாழ்கின்றனர். இந்த நிலையில், இத்தகைய காலத்திற்காகவே கடவுள் நம்மை வைத்திருக்கிறார் என்ற உண்மையை மறக்கக் கூடாது.

அருள்பணி என்பது நற்செய்தியாளர் அல்லது ஊழியர்களின் பணியாக மட்டுமே கருதப்படக்கூடாது. அது முழு திருச்சபையின் அழைப்பாகும். ஒருவர் பிரசங்கிக்கிறார்; ஒருவர் ஜெபிக்கிறார்; ஒருவர் ஆதரிக்கிறார்; ஒருவர் ஊக்கப்படுத்துகிறார். நாம் அனைவருமே நற்செய்தி பணியில் பங்கேற்கிறோம். DBM ஆதரவாளர்களாகிய நீங்கள் இந்த மாபெரும் ஊழியத்தின் பங்குதாரர்களாக இருக்கிறீர்கள்.

நீங்கள் வழங்கும் ஒவ்வொரு காணிக்கையும் ஒரு புதிய வாய்ப்பை உருவாக்குகிறது. நீங்கள் ஏறெடுக்கும் ஒவ்வொரு ஜெபமும் ஒரு ஊழியரை வலுப்படுத்துகிறது. நீங்கள் அளிக்கும் ஒவ்வொரு ஆதரவும் ஒரு புதிய இடத்தில் நற்செய்தி பரவ வழி வகுக்கிறது. பல நேரங்களில் உங்கள் பங்களிப்பின் விளைவுகளை நேரடியாகக் நீங்கள் காணாமல் இருக்கலாம். ஆனால் இறையரசு பணியில் எந்த அர்ப்பணிப்பும் வீணாகாது. எஸ்தரின் வாழ்க்கை நமக்கு தைரியத்தின் பாடத்தையும் கற்றுத்தருகிறது. அவள் தனது நிலையை தனக்காக பயன்படுத்தவில்லை; தன் மக்களின் நலனுக்காக பயன்படுத்தினாள்.

கிராமங்கள், நகர்ப்புற ஏழைகள், குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் விளிம்புநிலை மக்களிடையே நற்செய்திப் பணி விரிவடைந்து வருகிறது. எஸ்தரின் அழைப்பை நமது அழைப்பாக ஏற்றுக்கொள்வோம். இத்தகைய காலத்திற்காகவே கடவுள் நம்மை அழைத்திருக்கிறார். DBM ஊழியர்களுக்காகவும், புதிய விசுவாசிகளுக்காகவும், புதிய மிஷன் வாய்ப்புகளுக்காகவும் தொடர்ந்து ஜெபிப்போம்.உங்களுடைய நிலையான அன்பிற்கும், விசுவாசமான ஜெபங்களுக்கும், தாராளமான ஆதரவிற்கும் மீண்டும் என் மனமார்ந்த நன்றி ?.

*உங்கள் குடும்பங்களையும், , வாழ்வாதாரங்களையும் ஆண்டவர் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.*

**கர்த்தர் மேகத்திலிருந்து இறங்கி.... (-யாத் 34;5)**
ஆண்டவரும் மீட்பருமாகிய இயசுகிறிஸ்வின் திருப்பெயரில் வாழ்த்துகள்



Rev. ஆ. சற்குணம்
Convener - DBM

## பேரிரக்கம் நிறைந்த கடவுளை அறிவிக்கும் அருள்பணி

அருள்பணி என்பது மக்களை கிறிஸ்தவராக்குவது மட்டுமல்ல; கருணையும் கிருபையும் நிறைந்த கடவுளை உலகிற்கு அறிவிப்பதாகும். யாத்திராகமம் 34:5–7 கடவுள் தமது குணாதிசயத்தைத் தாமே வெளிப்படுத்தும் மிக முக்கியமான பகுதி. பொற்கன்றுக்குட்டியை வணங்கிய பாவத்தினால் இஸ்ராயேல் மக்கள் உடன்படிக்கையை மீறியிருந்தனர். ஆனால் கடவுள் அவர்களை முற்றிலும் நிராகரிக்காமல், தமது பேரிரக்கத்தை வெளிப்படுத்துகிறார்; இதுவே அருட்பணியின் மையம் ஆகும்.

## இறங்கி வந்து வெளிப்படும் கடவுள் (யாத். 34:5)

கர்த்தர் மேகத்திலே இறங்கி வந்து அங்கே அவனோடே நின்று, கர்த்தருடைய நாமத்தைப் பிரசித்தப்படுத்தினார். இறங்கி வந்து எபிரெயச் சொல் יָרַד Yara. இதற்கு கீழே இறங்குதல், மனிதர்களிடையே வருதல் என்று பொருள்படும். அருள்பணியின் அடிப்படை நற்செய்தியாக கடவுள் தொலைவில் இருந்து கட்டளையிடுகிறவராக அல்ல; மனிதர்களைச் சந்திக்க இறங்கி வருகிறவராக இருக்கிறார். மனிதர் கடவுளைத் தேடிச் செல்லும் முன்பே, கடவுள் மனிதரைத் தேடி வருகிறார். இங்கு மேகத்திலே இறங்கி வந்த கடவுள், புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவாக மனிதரிடையே வாசம் பண்ண வந்தார். எனவே அருள்பணி என்பது மனிதர்களை நீ பாவி என குற்றம்சாட்டுவது அல்ல; அவர்களைத் தேடி வந்துள்ள கடவுளின் அன்பை அறிவிப்பதாகும்.

## கடவுளின் திருப்பெயரும் அவருடைய குணாதிசயமும் (யாத். 34:6)

கடவுள் இரக்கமும் கிருபையும் உள்ளவர். இங்கே இரக்கம் எபிரெயச் சொல் רַחוּם (Rachum).தாயின் கருப்பை‘ என்ற பொருளைத் தருகிறது. தாய் தன் குழந்தையை நேசிப்பதைப் போல கடவுள் ஆழமான கரிசனையுடன் அன்பு செலுத்துகிறார். கிருபையுள்ளவர் என்பதற்கான சொல் חַנּוּן (Channun) இது தகுதியற்றவர்களுக்கும் காட்டும் தயவு. இஸ்ரவேலர் பொற்கன்றுக்குட்டியை வணங்கியதால் தண்டனைக்குத் உரியவர்கள். ஆனால் கடவுளோ தம் பேரிரக்கத்தை வெளிப்படுத்துகிறார். **அருள்பணியின் மையம் என்பது மனிதரின் பாவத்தை அல்ல; கடவுளின் பேரிரக்கத்தை அறிவிப்பது.** இன்று கடுமையான தீர்ப்புகளையும் கண்டனங்களையும் கேள்விப் படுகிறோம். ஆனால் அருட்பணி கருணையுள்ள கடவுளின் நற்செய்தியை அறிவிக்க நம்மை ஏவுகிறது.

## ஆயிரம் தலைமுறைகளுக்கு பேரிரக்கம் காட்டும் கடவுள் (யாத்.34: 7)

யாத்திராகமம் 34: 6, 7 வசனங்களில் கிருபை அல்லது பேரிரக்கம் Hesed என்ற வார்த்தையே பயன்படுத்தப்படுகிறது. மனிதரின் பாவம் சில தலைமுறைகளை பாதிக்கலாம் என்பதால், கடவுளின் பேரிரக்கம் ஆயிரம் தலைமுறைகளுக்கு நீடிக்கிறது என்ற நம்பிக்கை நிலைக்கச் செய்கிறது. இது அருள்பணியின் ஆற்றல்மிக்க நம்பிக்கையாகும். ஓரிடத்தில் நம்மால் விதைக்கப்படும் நற்செய்தி விதை, பல தலைமுறைகளை மாற்றும்படிக்குப் பயன்படுத்தகிறார். ஒரு குடும்பத்தில் பகிரப்படும் சாட்சி, எதிர்கால சந்ததிக்கும் ஆசிர்வாதமாக இருக்கும். அருள்பணி என்பது நிகழ்காலத்தை மட்டுமல்ல; எதிர்கால தலைமுறைகளையும் தொடும் ஊழியமாகும். அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்; ஆயினும் குற்றவாளியைத் தண்டிக்காமல் விடமாட்டார்.‘மன்னிக்கிறவர் என்பதற்கான எபிரெயச் சொல் נָשָׂא (Nasa) சுமந்து எடுத்துச் செல்லுதல்” அதாவது மனிதரின் பாவத்தை தாமே சுமந்து அகற்றுகிறார். அருள்பணி என்பது கிருபையை மட்டுமே பேசுவதல்ல; மனந்திரும்புதலையும் அழைப்பதாகும்.உண்மையான அன்பு பாவத்தை அனுமதிக்காது; மன்னிப்பின் வழியைத் திறக்கிறது. அருள்பணியில் கடவுளின் குணாதிசயத்தை அறிவிக்கிறோம் கடவுள் கோபமுள்ள நீதிபதி மட்டுமல்ல; அவர் கருணையுள்ள தந்தை. அருள்பணியில் பேரிரக்கத்தை பெற்றிக்கிறோம்; கண்டனத்தின் குரலாக அல்ல, பேரன்பின் குரலாக இருக்கிறோம்கடவுள் இறங்கி வந்தது போல, நாமும் மக்களிடையே சென்று அவர்களை அணுகி பாவத்தை மறைக்காமல், மன்னிப்பின் வழியையும் காட்டி ஆத்தும அறுவடை பணியை மேற்கோள்வோம்.

## இயக்குனரிடமிருந்து.......

தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்
1 யோவான் 2:17



அருள்திரு. I.D. ஜேக்கப் ரவிக்குமார்.
Director - DBM

தேவனுடைய சித்தத்தினால் இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனாகிய நான் திருமண்டலம் எங்குமுள்ள திருச்சபைக்கும் நற்செய்தி பணித்தளங்களுக்கும் அனைத்து புதிய விசுவாசிகளுக்கும் ஆதரவாளர்களுக்கும் நற்செய்தி பணியாளர்களுக்கும் முன்னேற்ற பணியாளர்களுக்கும் சபை ஊழியருக்கும் உதவியவர்களுக்கும் ஆயர்களுக்கும் எழுதுகிறதாவது, நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தர் ஆகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. நமது திருமண்டலத்தில் ஏழாவது பேராயர் பேரருள்திரு. S. பிரின்ஸ்கால்வின் ஐயா, உப தலைவர் & செயலாளர் அருள்திரு. L.டேவிட் பர்னபாஸ் மற்றும் திருமண்டல பொருளாளர் திருவாளர். D.S.அமிர்தம் ஆகியோர் கொடுத்து வரும் முழு ஆதரவிற்காகவும் கர்த்தரை துதிக்கிறேன்.

### பெருகும் நற்செய்தி பணி பெருகும் - நற்செய்தியாளர்கள்

2026 ஜூன் 1ஆம் தேதி மூன்று நபர்கள் நற்செய்தி பணிக்கு அர்ப்பணித்து நமது பேராயர் பேரருள்திரு. S. பிரின்ஸ் கால்வின் அவர்களால் நற்செய்தி பணியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.1. திரு உதயகுமார்– தேவாலா பணித்தளத்தில் (பந்தலூர்) தம் நற்செய்தி பணியை தொடங்கியுள்ளார்.கண்காணிப்பு ஆயர் அருள்திரு. ஜெகதீசன்.2.திரு.ஸ்டீபன் ராஜ் – கேத்துறை, சோகத்துறை (படுகா மிஷன்–கேத்தி) பணித்தளத்தில் நியமிக்கப்பட்டுள்ளார். கண்காணிப்பு ஆயர் அருள்திரு. கிறிஸ்டோபர் சாம்ராஜ் 3.திரு. சாம் நித்தின் – கோழிக்கரை – கட்டப்பட்டு (இருளர் மிஷன், கோத்தகிரி) வனிதாளத்தில் நியமிக்கப்பட்டுள்ளார். கண்காணிப்பு ஆயர் அருள்திரு. ஜெயமணி நற்செய்தி பணியாளர்களின் ஊழியங்களுக்காகவும் அவர்களை வழி நடத்துகிற கண்காணிப்பு ஆயர் பெருமக்களுக்காகவும் ஜெபிப்போம்.



திரு. உதயகுமார் – தேவாலா



திரு. ஸ்டீபன் ராஜ் – கேத்துறை



திரு. சாம் நித்தின் – கோழிக்கரை

### நற்செய்தி பணியாளர் பயிற்சி முகாம்

இம்மாதம் 16 முதல் 18ஆம் தேதி வரை கோத்தகிரி காருண்யகிரி டிவைன் சென்டரில் நற்செய்தி பணி இயக்க (DBM) மிஷனரிகளுக்கான பயிற்சி முகாம் நடைபெற உள்ளது இப்பயிற்சியின் நோக்கம் நிறைவேறவும் தேவைகள் சந்திக்கப்பவும் ஜெபிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

### ஊழியத்திற்கு புதிய இருசக்கர வாகனம்

நீலகிரி எருமாடு–வெட்டுவாடி பணித்தளத்தின் பயன்பாட்டிற்கான புதிய இருசக்கர வாகனம் CSI கிறிஸ்து நாதர் ஆலயம் திருச்சி சாலை, கோயம்புத்தூர். சார்பில் வழங்கியதை பேராயர் அவர்கள் ஆசீர்வதித்து ஜெபித்தார். திருச்சபையாருக்கும் (செயலாளர் திரு. பரமானந்தம், பொருளாளர் திரு. அருன் ஆனந்த ராஜ்) மற்றும் பொறுப்பாளர்களுக்கும் DBM சார்பாக நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

### இருசக்கர வாகனத்திற்காக நன்கொடை

நற்செய்தி கதிர் மே மாத இதழை வெளியிடவும் புதிய இருசக்கர வாகனம் வாங்கிடவும் ரூ.வி. 1,00,000.(ரூபாய் ஒரு லட்சம்) காணிக்கையாக வழங்கிய திரு எட்வின் சாமுவேல் திருமதி ஏ. கிரேஸ்லின் செல்வ குமாரி ஆகியோருக்கு DBM சார்பாக நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

## பணித்தள மன்றாட்டு குறிப்புகள்

**பணித்தளம் : மசக்கல் (ஹிந்தி) ஊழியர் : எம். ராபர்ட்**



**துதிப்போம்**

பல ஆண்டுகளுக்கு பின் மசக்கல் ஆலயத்தில் VBS யில் நிறைய பிள்ளைகள் ஆண்டவரின் அன்பை அறிந்து கொண்டதற்காக.... காய்ச்சலினால் மிகுந்த பலவீனமாக இருந்த ராஜாமணி நல்ல சுகம் பெற்றதற்காக....

**மன்றாடுவோம்**

ரம்யா இரண்டு குழந்தைகளுடன் கணவரை விட்டு பிரிந்துள்ள குடும்பம் சேர்ந்து வாழ..... செந்திலின் பயிர்கள் மழையினால் பெரு சேதம் அடைந்த மன வருத்தம் நீங்க.... வேலுச்சாமி குடி அடிமைத்தன நீங்கி விடுதலை பெற....

**பணித்தளம்: எருமாடு வெட்டுவாடி ஊழியரின் பெயர் :Y. ஜாய் கிறிஸ்டி**



**துதிப்போம்**

ஜோஸ் கிதியோனுக்கும் தங்கராஜ் ஐயாவுக்கும் நல்ல சுகத்தை கொடுத்ததற்காக... விடுமுறை வேதாகம பள்ளி வந்த அனைத்து பிள்ளைகளின் இல்லங்களை சந்திக்க ஆண்டவர் கிருபை செய்ததற்காக... அபிக்கு நல்ல வேலை கிடைத்ததற்காக

**மன்றாடுவோம்**

இடுப்புக்கு கீழ் செயலற்று இருக்கும் முனியன் சுகம் பெற .நெஞ்சு வலியால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள ராமசாமி மற்றும் வீரய்யா சுகம் பெற... கடந்த மாதம் கணவனை இழந்த விமலா தேவி ஆறுதல் பெற... அபிஜித்துக்கு நல்ல வேலை கிடைக்க... சரண்யாவுக்கு திருமண தடை நீங்க...சந்திர சேகருக்கு புற்றுநோய் நீங்கி சுகம் பெற....

**பணித்தளம் : நடுப்பாலையம் ஊழியர்: ஆல்வின் பிரசன்னா சு**



**துதிப்போம்**

ஜெனிபர் அவர்களது திருமணத்திற்காக ஜெபித்தநிலையில், இப்போதே திருமணம் நிச்சயம் ஆகியுள்ளதற்காக....

**மன்றாடுவோம்**

சுமித்ரா – ராஜேந்திரன் குடும்பம் ஒற்றுமையாக வாழவும் ஒன்றுசேர... லீலாவதி அவர்கள் இரட்சிக்கபட... சகோதரி. நேசமணி அவர்களது கணவருக்கு விபத்தில் ஏற்பட்ட கால் முறிவிலிருந்து சுகம் பெற... பரிசுத்தம் அம்மா குடும்பம் இரட்சிக்கபட... நடுப்பாலையத்தில் உள்ள வாலிபர்களும் ரட்சிக்கபட...

**ஊழியர்: M. ஜெய ஸ்டெல்லா பணித்தளம்: சுல்தான்பேட்டை**



**துதிப்போம்**

தடையின்றி ஊழியங்கள் நடைபெற்றதற்காக...சுல்தான்பேட்டையில் ஊழியருக்கென்று வீடும் குழந்தைகளுக்கு நல்ல பள்ளியும் கிடைத்தற்காக... ஸ்ரீநிதி மன அழுத்த சுகவீனத்தில் 50 நாட்கள் இருந்த போதும் +12 வில் 371 மதிப்பெண் எடுத்தற்காக....

**மன்றாடுவோம்**

சுல்தான்பேட்டை, வதம்பச்சேரி, வாரப்பட்டி, செஞ்சேரி, மூ கிருஷ்ணாபுரம், குமாரபாளையம் ஆகிய பகுதி ஊர் தலைவர்கள் சந்திக்கப்பட... ஜெயிலா பானு கடன் பிரச்சனை மாறவும், கடையில் வியாபாரம் நன்றாக நடைபெற.... முதியோர் இல்லத்திலுள்ள முதியோரின் சுகத்திற்காக மன்றாட்டு... சுல்தான்பேட்டை தையல் பயிற்சி வரும் பெண்கள் அனைவரும் மனதார ஆண்டவரை ஏற்றுக்கொள்ள...

**பணித்தளம் : (ஹிந்தி) திருப்பூர் ஊழியர்: சங்கீதா கெத்சியாள்**



**துதிப்போம்**

நிர்மலாவிற்கு உடல் வீக்கம் சரியானதற்காக... பிங்கி சிறுநீர் தொற்றியிருந்து சுகம் பெற்றதற்காக... ராகேல் சிங்கிற்கு ரத்த சோகை சரியானதற்காக...தானிஷ் குழந்தைக்கு காய்ச்சலிலருந்து சுகம் பெற்றதற்காக...

**மன்றாடுவோம்**

சபீர், அஸ்மிதா, சோம் மூவரும் ஞானஸ்நானம் எடுப்பதற்குள்ள தடைகள் மாற, மிதாவின் கணவர் குடிப்பழக்கத்தில் இருந்து விடுதலை பெற... லிப்ஸாவிற்கு தைராய்டு குணமாக... தன்ஜித்திற்கு கால் வலி மற்றும் வயிற்று எரிச்சல் குணமாக... அஸ்மிதாவின் கடன் பிரச்சினை மாற

**பணித்தளம்: வடசித்தூர் ஊழியர் : M வசந்த்பால் கிளமெண்ட்**



**துதிப்போம்**

ஜனனிக்கு பிரசவத்தில் பெண்குழந்தை பெற்றெடுத்தற்காக... எசேக்கியேலின் திருமணம் சிறப்பாக நடைபெற்றதற்காக... VBS சிறப்புடன் நடந்ததற்காக...

**மன்றாடுவோம்**

VBS – பிள்ளைகள் தொடர்ந்து ஆலயத்திற்கு வர... பிரின்சிலி கல்லூரியில் சேர தேவைகள் சந்திக்கப்பட... குணசீலி, ஜெய்ஷா சுகவீனம் நீங்கி பெலப்பட..கனகராஜ்க்கு ஏற்ற வேலைவாய்ப்பு கிடைக்க...சுரேஷ் ஆராதனையில் பங்குபெற...

**பணித்தளம்: நியு கோப் ஊழியர் பெயர்: ஆ. காட்வின் மோசஸ்**



**துதிப்போம்**

பாரதிராஜா மே மாதம் 24 திருமணம் நல்ல முறையில் நடை பெற்றதற்காக...

**மன்றாடுவோம்**

கமலம் மருமகன் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு உள்ளவர் நலம் பெற... முருகேசன் வேலைவாய்ப்பு கிடைக்க... தாயம்மாள் நெஞ்சு வலி நீங்க நலம் பெற... படுத்த படுக்கையாக உள்ள ராஜ்குமார் சுகம் பெற... ஜோனிக்கு திருமண காரியத்துக்காக... கெட்சியள் கணவர் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள.... கிறிஸ்துவை அறியாத மக்களைச் சந்திக்க திறந்த வாசல் உண்டாக...

**பணித்தளம் : பொன்னாபுரம் ஊழியர்: K.சரவணன் ஆசீர்**



**துதிப்போம்**

சுந்தரமூர்த்தி 12ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றதற்காக... சகுந்தலா பெலவீனம் நீங்கி நல்ல சுகம் பெற்றதற்காக...

**மன்றாடுவோம்**

சாரால் ராஜேஸ்வரி பெலவீனம் நீங்கி பூரண சுகம் பெற...சுந்தரமூர்த்திக்கு கல்லூரியில் நல்ல படிப்பும் தேவைவும் சந்திக்கபட.. டெய்சியிடம் பணம் பெற்றவர்கள் திருப்பிக் கொடுக்க... சந்திர சேகர் வீடு கட்டி முடிக்கப்பட, பணத்தேவை சந்திக்கப்பட தேவகி நோயிலிருந்து சுகம் உண்டாக...

**பணித்தளம் : சோல்ராக் ஊழியர்: S.வினோத் டேனியல்**



**துதிப்போம்**

சுஷந்தி பார்மஸி படிப்பிற்கு சீட் கிடைத்தற்காக...மன்றாடுவோம் ஏழு மாத கர்ப்பமாக உள்ள ஜெய்சிரி நலமுடன் விளங்க... சுசீலா இரத்த அழுத்தம் குறைவால் வேலைக்கு செல்ல முடியாமல் உள்ளவர் சுகம் பெற...

**பணித்தளம்: கோவில்பாளையம் குரும்பபாளையம் ஊழியர்: ஜா. சுதா**



**துதிப்போம்**

ஊழியர் மகன் நல்ல மதிப்பெண்ணில் தேர்ச்சி பெற்றதற்காக... தீபக் சுகவீனம் நீங்கி சுகம் பெற்றதற்காக... சுமதிக்கு தொடர்ந்து வேலை கிடைத்ததற்காக....

**மன்றாடுவோம்**

விஜயகுமாரி அம்மாவுக்கு கை எலும்பு முறிவிலிருந்து சுகம்பெற... விக்டோரியா பூரண சுகம்பெற.....சோபியாவற்கு குழந்தைப் பாக்கியம் கிடைக்க ... பேபி அம்மாவுக்கு கால் வலியிலிருந்து விடுதலை கிடைக்கப் பெற...

**பணித்தளம் : அழகுமலை ஊழியர் : S.கார்த்திக் பால் ஜோ**



**துதிப்போம்**

பெருந்தொழுவு பகுதியில் வாடகைக்கு வீடு கிடைத்ததற்காக...ஜென்சி தேர்வில் வெற்றி பெற்றதற்காக...

**மன்றாடுவோம்**

பாக்கியம் அவர்களுக்கு ஆபரேஷன் பின்புள்ள வலி நீங்க... அந்தோணிசாமிக்கு இதயத்தில் உள்ள ஓட்டை நீங்க... பாக்கியத்தின் இரண்டு குழந்தைகளின் படிப்பு தேவைக்காக...பெருந்தொழுவு ஆலயம் கட்டப்பட...

**பணித்தளம்: மைல்கல், மதுக்கரை ஊழியர்: D.கோபிநாதன்**



**துதிப்போம்**

ஈசாக்கு திருமணம் நடந்ததற்காக... இதுவரை DBM ( promotional Work) முன்னேற்ற பணிகளுக்காக மேற்கொண்ட பயணங்களில் தந்த பாதுகாப்பிற்காக... வேலந்தாவளத்தில் நடைபெற்ற VBS 100–க்கும் மேற்பட்ட குழந்தைகள் கலந்துகொண்டனர், பலத்த மழை பெய்தபோதிலும், மழையை நிறுத்தி வெற்றிகரமாக நடத்தியதற்காக... மைல்கல், ஜெபா பிஹெச்டி (Ph.D.,) இடம் பெற்றததற்காக... ஜெய சாமுவேல் ராஜ் விபத்தின் போது, பாதுகாத்ததற்காக...கொதிக்கும் எண்ணெய் காலில் கொட்டியதால் பலத்த காயமடைந்திருந்த ஷெர்லின் சுகம் பெற்றதற்காக....

**மன்றாடுவோம்**

தனது பெயரை வெளியிட விரும்பாத ஒருவர் குடும்பத்தில் பிரச்சனைகள் தீர்க்கப்பட வியாபாரம் நன்றாக நடக்க.... செந்தமிழ் நகர், மணி மற்றும் அவரது மகன் பாதுகாப்பிற்காக... விஜயகுமார், பிரின்சி, மற்றும் திருமதி மேரி அவர்களின் மகள் ஆகியோர்களின் திருமணக் காரியங்கள் கூடி வர.... ஜெயம்மாள் கால்வலியிலியுந்து சுகம் பெற....+2 முடித்துள்ள பணித்தள மாணவர்களின் உயர் கல்விக்காக... மே மாதம் மரித்த திரு. டேவிட் ஆசிர்வாதம் குடும்பத்தினர் ஆறுதல் பெற...

**பணித்தளம்: கூட்டுறவு நகர் சுன்டக்காமுத்தூர் ஊழியர் :P. சுரேஷ்**

**துதிப்போம்**

பணித்தளத்தில் எதிர்ப்புகளின் நடுவில் ஆராதனையும் ஊழியமும் தொடர்வதற்காக...மூன்று ஆத்மாக்கள் புதிதாக ஆலயத்துக்கு வருவதற்காக...

**மன்றாடுவோம்**



உடல் நலக்குறைவால் மருத்துவமனையில் உள்ள சந்திரசேகர் சுகம் பெற... முத்துச் செல்வி குடல் புண் மற்றும் நெஞ்செரிச்சல் வாய்ப்புண் பாதிப்பில் இருந்து சுகம் பெற... விஜயா வயது மூப்பினால் தனிமை, மன உளைச்சல். உடல் பலவீனம் நீங்க... ரோஜா வீட்டுலோன் கட்டிமுடிக்க கூட்டுறவு நகரில் ஆலய கட்ட தனி இடம் வாங்க... ஊழியர் வெரிகோஸ் வேயின் சுகவீனம் மாற... ஆத்தும அறுவடை மற்றும் திருமுழுக்கு எடுக்க ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட திறந்த வாசல் உண்டாக... கூட்டுறவு நகரில் எதிர்ப்புகள் இல்லாதபடி பிசாசின் கிரிகைகள் அழிக்கப்பட... பில்லி சூனியம் மாந்திரீக கட்டுகளிலிருந்து மக்கள் விடுதலை அடைய...

**பணித்தளம் : DBM முன்னேற்ற பணியாளர், நீலகிரி மாவட்டம் ஊழியர்: G. டேனியல் யுவராஜ்**

**துதிப்போம்**



கடந்த இரண்டு ஆண்டுகளாக நீலகிரி மாவட்டத்தின் DBM முன்னேற்ற பணியாளராக ஊழியம் செய்ய கர்த்தர் செய்த நன்மைகள்,வழிநடத்துதல்கள், கிருபைகளுக்காக ஸ்தோத்திரம்.

**மன்றாடுவோம்**

ரூபி வலிப்பு நோய் மற்றும் பெலவீனங்கள் குணமாக... ருக்குமணி வலிப்பு நோய் குணமாக... மல்லிகா காது வலி குணமாக, வீடு கட்டப்பட... ரூத் நுரையீரல் பிரச்சனை குணமாக....

**பணித்தளம்: லவ்டேல் மந்து - ஊழியர் : பூங்கிலி**

**துதிப்போம்**

கடந்த 31/05/2026 இல் கோவை திருமண்டலத்தின் பேராயர் S. பிரின்ஸ் கால்வின் ஐயா மூலமாக CSI கிறிஸ்து நாதர் ஆலயத்தில் (திருச்சி சாலை) மிஷனரியாக என்னை பிரதிஷ்டை செய்யப்பட்டதற்காக துதிப்போம்.



**மன்றாடுவோம்**

லவ்டேல் மந்து பாபு குடியிலிருந்து விடுதலை பெற குடும்பப் பிரச்சினை மாறி சமாதானம் பெற... பெட்டு மந்து தம்பு ராஜ் பெலவீனமாறி சுகம் உண்டாக... லவ்டேல் மந்து வாலிப தம்பி–தங்கைகள், ஆண்டவரை அறியவும், உலக காரியத்தில் இருந்து விடுதலை பெற...

**பணித்தளம்: கிளன்மார்கன் - ஊழியர் : S. டேவிட் ராஜ்**

**மன்றாடுவோம்**



இரண்டு பிள்ளைகள் உள்ள ஜெயாம்மா கணவர் இறந்துவிட்டார், பழைய வீடு சரி செய்யப்படவும், தேவைகள் சந்திக்கப்படவும் ஆலயத்திற்கு தொடர்ந்து வர...

# ஜெபிப்போம் வாருங்கள்

* பல்வேறு மொழி பேசும் மக்கள் சந்திக்கப்பட..
(பழங்குடி இருளர் தோடர் படுகர் மலையாளம் மற்றும் ஹிந்தி பேசுவோர்)
* பணித்தள ஆலயம் கட்ட இடம் வாங்க...(சுண்டக்காமுத்தூர் வடசித்தூர் சுல்தான்பேட்டை)
* ஆண்டிற்கு குறைந்தது 200 பேரை திருமுழுக்கிற்கு ஆயத்தப்படுத்த...
* ஆத்தும பாரமுள்ள ஜெப குழுக்கள் உருவாகிட...
* வனவிலங்குகள் மதவெறியர்கள் பிசாசு தந்திரங்களில் இருந்து மிஷனரிமார்கள் பணித்தள ஊழியர்கள் வல்லமையாக பயன்படுத்தப்பட்டு அற்புதங்களும் அடையாளங்களும் நடைபெற...
* புதிதாக ஆண்டவரை ஏற்பவர்களுக்கு எதிரான பிரச்சனைகள் நீங்கிட...
* எழுப்புதலின் தீ எங்கும் பற்றி எரிய...
* முழுநேர மிஷனரி பணிக்கு அர்ப்பணிப்பு உள்ள ஊழியர்கள் எழும்பிட...
* பணித்தள மக்கள், குழந்தைகள், கல்வி, சுகாதாரம், மருத்துவ உதவிகள் கிடைத்திட...
* மிஷனெரி குடும்பத்தார் பாதுகாப்பு மற்றும் ஆசிர்வாதம் கிடைத்திட...
* மிஷனரிகளுக்கு 2 சக்கர வாகனமும் DBM அலுவலகத்திற்கு 4 சக்கர வாகனம் கிடைக்கப் பெற...
* மசக்கல் மிஷினெரி இல்லம் கட்டப்பட











# பணித்தளம் அறிவோம்

## பனித்தளம்: கூட்டுறவு காலனி – சுண்டக்காமுத்தூர்.

பணியாளர். P.சுரேஷ் மேற்பார்வை ஆயர் : அருள் திரு. J.வின்சென்ட்..



கோயம்புத்தூர் கோவை புதூர் அருகில் ராம செட்டி பாளையம் பஞ்சாயத்திற்கு உட்பட்ட பகுதி சுண்டக்காமுத்தூர் பணித்தளமாகும். இங்கு கூட்டுறவு நகர், ஆறுமுக கவுண்டனூர், லட்சுமி நகர், ஜே ஆர் டி ஹில்ஸ், P&T காலனி, ஜே ஆர் டி ராயல்ஸ், ஜே ஆர் டி காலனி, சுண்டக்கா முத்தூர். ஆகிய பகுதிகளில் நற்செய்தி அறிவிக்கப்படுகிறது. இங்கு திரு.P.சுரேஷ் நற்செய்தி பணியாளராக மூன்று ஆண்டுகளாக அவர்கள் ஆண்டவரின் ஊழியத்தை நிறைவேற்றி வருகிறார். இவரின் மனைவி திருமதி. G.ஜெசிந்தா. மகன் பால் ஜெஸ்வின் (வயது 17) மகள் எப்சிபா ஜெஸ்லின் (வயது 12) ஆகியோர் உடன் இருந்து ஊழியத்தை நிறைவேற்றி வருகின்றனர். இங்கு இந்து சமயத்தைச் சார்ந்த குடும்பங்கள் அதிகமாக வசிக்கின்றனர்.

இப்பகுதிகளில் விக்கிர வழிபாடு கோயில்கள் 150 மீட்டருக்கு ஒரு இந்து கோயில் காணப்படுகிறது. திரு.சிரோன்மணி முன்னர் இங்கு பணியாற்றிய போது இரவு ஜெபத்துக்கு சென்ற பொழுது, பிரச்சனையும் மன உளைச்சலின் காரணமாக தற்கொலை செய்து கொள்ளலாம் என்ற சூழலில் இருந்த திரு. ராஜேந்திர குமார் குடும்பத்தினருக்கு தற்செயலாக ஆண்டவரின் நற்செய்தி அறிவித்து வந்தார். அக்குடும்பமே தற்கொலையில் இருந்து பாதுகாக்கப்பட்டு ஆண்டவரால் சமாதானத்தை பெற்றுக் கொண்டனர். இன்றும் விசுவாச குடும்பமாக சாட்சியாக வாழ்ந்து வருகின்றனர். இப்போது 14 குடும்பங்களுக்கு மேலாக ஆராதனையில் பங்கு பெற்று வருகின்றனர்.

இங்கு ஒரு வாடகை கட்டிடத்தில் ஆராதனைகள் நடந்து வருகின்றன. கடந்த ஏப்ரல் மாதம் அருகில் இருந்த ஒரு அரசு அதிகாரி காவல் நிலையத்தில் புகார் அளித்து ஆராதனை நடத்த மிகப்பெரிய தடையை ஏற்படுத்தினார். ஆனால் ஆண்டவருடைய இரக்கத்தாலும் ஏராளமான மக்களின் ஜெபத்தாலும் தடையை ஏற்படுத்தியவரே மனம் மாறி தொடர்ந்து நடத்திக் கொள்ளுங்கள் என்று நம்பிக்கை கொடுத்தார். தொடர்ந்து ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் ஆராதனை நடைபெற்று வருகிறது. வீட்டு ஜெபக்கூட்டம், இல்ல சந்திப்பு ஊழியம், தனி நபர் சந்திப்பு ஊழியம், போன்றவற்றின் வாயிலாக நமது நற்செய்தி பணி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தப் பணித்தளத்தின் பக்கபலமாக கோவை புதூர், சிஎஸ்ஐ கிறிஸ்து நாதர் ஆலயம். செயல்பட்டு வருகிறது.

13 ஆண்டுகளாக ஊழியம் நடைபெற்று வரும் இங்கே ஆலயத்திற்கான இடம் வாங்கி ஆலயம் கட்டப்பட வேண்டும். மிகப்பெரிய ஒரு தரிசனம் உள்ளது. ஆலயத்திற்கான இடம் கண்டறியப்படவும் பொருளாதார சேவைகள் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.

ஊழியக்காரர் திரு சுரேஷ் வெரிகோஸ் நரம்பினால் மிகுந்த இன்னலுக்கு உள்ளாகி வருகிறார், ஊழியக்காரரின் மனைவி திருமதி. ஜெசிந்தா கடந்த ஆண்டு மிகப்பெரிய அறுவை சிகிச்சை செய்யப்பட்டு ஆண்டவரால் சுகம் பெற்று வருகிறார். ஊழியரின் குடும்பமும் பணித்தளமும் பல்வேறு போராட்டங்களில் இருந்து வருகின்றனர் இப்படிப்பட்ட சூழலில் பணித்தளதிற்காக ஜெபிக்க வேண்டிய பொறுப்பு நம் அனைவரிடமும் உள்ளது. மற்ற திருச்சபையிலிருந்து சில வாலிபர்கள் இந்த ஊழியத்திற்காக ஜெபித்து வருகின்றனர்.

**ஆண்டவருக்கே துதியும் கனமும் மகிமையும் உண்டாவதாக**

## நீலகிரி மாவட்டம்

| | | |
|---|---|---|
| 1.திரு. S.வினோத் டேனியேல் | – | சோல்ராக் தூதூர்மட்டம் – இந்தி மிஷன் |
| 2.திரு. M.ராபர்ட் | – | மசக்கல்– இந்தி மிஷன் |
| 3.திருமதி. Y.ஜாய் கிறிஸ்டி | – | எருமாடு, வெட்டுவாடி – மலையாளம் மிஷன் |
| 4.திரு. S.டேவிட்ராஜ் | – | கிளன்மார்கன் – தோடா மிஷன் |
| 5.திரு. ஸ்டீபன் ராஜ் | – | கேத்தோரை சோகத்துரை – படுகா மிஷன் |
| 6.திரு. சாம் நித்தின் | – | கோழிக்கரை & கட்டப்பெட்டு – இருளர் மிஷன் |
| 7.திரு.காட்வின் மோசஸ் | – | நியூ ஹோப், கூடலூர் |
| 8.திருமதி.அன்னம்மாள் | – | பொக்காபுரம், மசினகுடி |
| 9.திருமதி. பூங்கிலி டேவிட்ராஜ் | – | தோடா பணித்தளம் MISSION II ஊட்டி |
| 10.திரு. உதயகநகுமார் | – | தேவாலா பணித்தளம் |

## கோவை மாவட்டம்

| | | |
|---|---|---|
| 1. திரு.G.டேனியேல் யுவராஜ் | – | கோவை வட்டகை, முன்னேற்றப்பணி |
| 2.திரு.D.கோபிநாதன் | – | மைல்கல், மதுக்கரை |
| 3.திரு.சுரேஷ் | – | கூட்டுறவு நகர், சுண்டக்காமுத்தூர் |
| 4.திரு.வசந்த்பால் கிளமெண்ட் | – | கிணத்துகடவு, வடசித்தூர் |
| 5.திருமதி.G.சுதா | – | குரும்பப்பாளையம் |

## திருப்பூர் மாவட்டம்

| | | |
|---|---|---|
| 1.திரு. K.சரவணன் ஆசீர் | – | பொன்னாபுரம் – நல்லூர்/முன்னேற்றப்பணி |
| 2.திருமதி.A.சங்கீதா கெத்சீயாள் | – | இந்தி மிஷன் |
| 3.திரு. S.ஆல்வின் பிரசன்னா | – | நடுப்பாளையம், சோமனூர் |
| 4.திருமதி. M.ஜெய ஸ்டல்லா | – | சுல்தான்பேட்டை, பல்லடம் |
| 5.திரு. கார்த்திக் பால்ஜோ | – | அழகுமலை பெருந்தொழுவு |

**இந்த கல்வியாண்டில் நம் மிஷினெரிகளின் பிள்ளைகள் 16 பேர் புதிய வகுப்பிற்க்கு செல்கின்றனர்**
**இவர்களின் கல்வி கட்டனத்திற்காக ஜெபியுங்கள் தாங்குங்கள்**

## நன்றி தெரிவிக்கிறோம்

ஆண்டவருடைய பெரிதான கிருபையால்
2026 – ஜூன் மாத நற்செய்தி கதிர்
இதழை வெளியிட ஆதரவளித்த

**Franklin Joseph.C**
**Brewine & Frankson Appliances**
**Managing Director**

அவர்களுக்கு நற்செய்தி பணியத்தின்
சார்காக நன்றியைதெரிவித்துக்
கொள்கிறோம். கடவுள் தாமே
அடியார்களையும் நிறுவனத்தையும்
ஆசீர்வதிப்பாராக

